**செய்தி வெளியீடு எண்: 599** **நாள்: 16.10.2011**

பத்திரிக்கைச் செய்தி :

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை –106.

இந்திய மருத்துவத் துறையில் அரசு மற்றும் தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.யு.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ் மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வு சென்னை–106 அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் 21/10/2011 முதல் 24/10/2011 வரை கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும். இக் கலந்தாய்வில் பாளைங்கோட்டையிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் நாகர் கோவிலில் உள்ள அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரிகளுக்கும் கலந்தாய்வு நடைபெறும். இக் கல்லூரிகளுக்கான வகுப்புகள், உயர்நீதிமன்ற உத்திரவின்படி இந்திய மருத்துவ மத்திய கழகம், புதுதில்லி மற்றும் மத்திய அரசின் ஆயுஷ் துறையின் அனுமதி கிடைத்த பிறகு தொடங்கப்படும். 21/10/2011 அன்று நடைபெறும் கலந்தாய்வில் ஏற்கனவே 13/10/2011 அன்று நடைபெற்ற முதற்கட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு கல்லூரி சேர்க்கைக்கான ஒதுக்கீடு ஆணை பெற்றவர்கள் விரும்பினால், மீண்டும் இக்கலந்தாய்வில் கலந்து கொண்டு தங்களின் தர வரிசை மற்றும் மதிப்பெண்படி தாங்கள் விரும்பும் கல்லூரிக்கான ஒதுக்கீட்டை பெறலாம்.

| நாள் | கிழமை | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|---|
| | | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை | பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை |
| 21/10/2011 | வெள்ளிக் கிழமை | அனைத்து சிறப்பு பிரிவு மற்றும் பொது பிரிவு தர வரிசை எண் 1 முதல் 202 வரை கட் ஆப் மதிப்பெண் 197.00 முதல் 175.25 முடிய | /////// |
| 22/10/2011 | சனிக் கிழமை | தர வரிசை எண் 203 முதல் 354 வரை கட் ஆப் மதிப்பெண் 175.00 முதல் 163.50 முடிய | தர வரிசை எண் 355 முதல் 501 வரை கட் ஆப் மதிப்பெண் 163.25 முதல் 154.25முடிய |
| 23/10/2011 | ஞாயிற்றுக் கிழமை | தர வரிசை எண் 502 முதல் 675 வரை கட் ஆப் மதிப்பெண் 154.00 முதல் 143.25 முடிய | தர வரிசை எண் 676 முதல் 861 வரை கட் ஆப் மதிப்பெண் 143.00 முதல் 130.00 முடிய |
| 24/10/2011 | திங்கள் கிழமை | தர வரிசை எண் 862 முதல் 1001 வரை கட் ஆப் மதிப்பெண் 129.75 முதல் 117.00முடிய | தர வரிசை எண் 1002 முதல் 1141 வரை கட் ஆப் மதிப்பெண் 116.75 முதல் 82 .25 முடிய |

செயலர், தேர்வுக் குழு

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**